

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 21-08-2024

# அத்திக்கடவு - அவிநாசி திட்டம் யாரால்? - 2

**அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தை கிடப்பில் போட்டது அ.தி.மு.க. அரசு.**

* 2015-ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் இது தொடர்பாக பொதுநல வழக்கு போடப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சிக்கு பல்வேறு கேள்விகளை நீதிபதிகள் எழுப்பினார்கள். தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது. சட்டமன்றத்தில் இன்றைய முதலமைச்சர் - அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்தார்கள். **'தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அத்திக்கடவு திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படும்'** என்று தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். அப்போதும் அசையாமல் கிடந்தது அ.தி.மு.க. அரசு.

* 2016-ம் ஆண்டு அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்தி, அவிநாசியில் பலரும் தொடர் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் நடத்தியவர்கள்மீது வழக்கு போட்டது அ.தி.மு.க. அரசு. பொதுமக்களின் போராட்டம் தொடர்ந்த நிலையில் மனம் மாறினார் அப்போது முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா. ஆய்வு பணி களுக்கான ஆரம்ப கட்ட நிதியாக ரூ.3.27 கோடியை ஒதுக்கினார். முழுமையாக நிதி ஒதுக்கீடு செய்யவில்லை ஜெயலலிதா.

* 2017 ஆம் ஆண்டு மீண்டும் போராட்டம் நடைபெற்றது. அதன்பிறகு, 'மூன்று ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்படும்' என்று அ.தி.மு.க. அரசு அறிவித்ததே தவிர, இந்த ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

* மக்களின் தொடர் போராட்டத்தின் காரணமாக 2018 ஆம் ஆண்டு 250 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தது அ.தி.மு.க. அரசு. அது முழுமையான நிதி அல்ல. 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 அன்றைய முதலமைச்சர் பழனிசாமி, இத்திட்டத்தை தொடங்கி வைத்தாரே தவிர முழுமையான நிதியை ஒதுக்கவில்லை.

*** இன்றைக்கு ரூ.1,916.14 கோடி மதிப்பீட்டில் திட்டம் முடிவு பெற்றுள்ளது என்றால் திருத்திய நிர்வாக ஒதுக்கீட்டு ஒப்புதலை வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்.**

பழனிசாமி ஆட்சியில் காளிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் இருந்து உபரி நீரை பம்ப் செய்ய நிலம் கையகப்படுத்தவில்லை. தண்ணீர் எடுக்கும் பகுதியானது சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் ஒப்புதல் பெறாமல் இருப்பதையும் தி.மு.க. அரசுதான் கண்டுபிடித்தது. அந்த விவசாயிகளை சந்தித்து விருப்பங்களை கேட்டறிந்து பல முறை பேச்சுவார்த்தை நடத்தி விவசாயிகள் கேட்கும் இழப்பீட்டுத் தொகையை முடிவு செய்த பின்னர் பணிகளை தி.மு.க. அரசுதான் துவங்கியது. வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தன்னை முழுமையாக இப்பணிக்கு ஒப்படைத்துக் கொண்டார். மூன்று நீரேற்று நிலையங்களை அமைப்பதற்கான இடத்தை தி.மு.க. அரசுதான் வாங்கியது. பழனிசாமி வாங்கவில்லை.

மேட்டுநாவிதன் பாளையத்தில் 14 விவசாயிகள், எலவமலை கிராமத்தில் 34 விவசாயிகள், இரண்டாவது நீரேற்றும் நிலையம் செல்வதற்கான முக்கிய பாதை அமைக்க 16 விவசாயிகள் - என மொத்தம் 61 விவசாயிகளிடம் அமைச்சர் முத்துசாமி, பல முறை பேசி உடன்பட வைத்து உடன்படிக்கை செய்து கொண்ட பிறகுதான் இத்திட்டம் முழுமை பெற்றது. இந்த 61 விவசாயிகள் ஒப்புதல் தராமல் இருந்திருந்தால் ஒட்டுமொத்த திட்டமும் செயல்படுத்த முடியாமல் போயிருக்கும். இவர்களை பழனிசாமி அரசு கவனத்தில் கொள்ளவே இல்லை. இவர்களிடம் பேசவே இல்லை.

**அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தை தனது ஆட்சி காலத்திலேயே முடித்து விட்டதாகச் சொல்கிறாரே பழனிசாமி! அது உண்மையா? சுத்தப் பொய்.**

MS குழாய் பதிக்கும் பணி 267 கி.மீட்டர் தூரம் நடக்க வேண்டும். 116 கி.மீட்டர் மட்டும்தான் பழனிசாமி ஆட்சியில் முடிந்தது. தி.மு.க. ஆட்சியில் தான் 151 கி.மீட்டருக்கு குழாய்கள் பதிக்கப்பட்டன. HDPE குழாய்கள் பதிக்கும் பணி 797 கி.மீட்டருக்கு நடக்க வேண்டும். 525 கி.மீட்டர் மட்டும் தான் பழனிசாமி ஆட்சியில் முடிந்தது. 272 கி.மீட்டர் பணிகளை தி.மு.க. ஆட்சிதான் முடித்தது. 117 கி.மீட்டருக்கான நிலம் எடுப்புப் பணிகளை தி.மு.க. ஆட்சிதான் செய்தது. மின்மாற்றிகள், மின் மோட்டார்கள், பம்புகள், பேனல் போர்டுகள் பொருத்தும் 60 விழுக்காடு பணிகள் தி.மு.க. ஆட்சியில்தான் செய்யப்பட்டன.

மின் கம்பங்கள் அமைத்தல், பூமிக்கு அடியில் மின் தொடரமைப்புகள் பதித்தல் என்பது 78 கி.மீட்டர் தூரம் நடக்க வேண்டும். பழனிசாமி ஆட்சியில் 22 கி.மீட்டர்தான் நடந்தது. தி.மு.க. ஆட்சியில்தான் 52 கி.மீட்டர் பணிகள் நடைபெற்றன. குளம், குட்டைகளில் நீர் வெளியேற்றும் அமைப்பு பழனிசாமி ஆட்சியில் செய்யப்படவே இல்லை. 1045 வெளியேறும் அமைப்புகள் தி.மு.க. ஆட்சியில்தான் செய்யப்பட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் குழாய்கள் பதித்த போது சில பகுதிகளில் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். அவர்களிடம் அ.தி.மு.க. அரசு பேச்சுவார்த்தை நடத்தாமல் குழாய் பதிக்கும் பணிகளை அப்படியே நிறுத்திவிட்டது. 2022 ஆகஸ்ட் மாதம் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அப்பகுதிக்கு சென்று பார்வையிட்டார்கள். அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டு குழாய் பதிக்கும் பணிகள் மீண்டும் தொடங்கியது.

அ.தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட குழாய்களில் சில 2023 ஆகஸ்ட் மாதம் உடைந்து தண்ணீர் வீணாக வெளியேறியது. தி.மு.க. ஆட்சியில் தான் அவையும் சரி செய்யப்பட்டன. சில கட்டுமானப் பணிகளை மட்டும் செய்துவிட்டு, 'திட்டம் முடிந்துவிட்டது' என்கிறார் பழனிசாமி. அத்திக்கடவு - அவிநாசி திட்டத்துக்கும் ஆர்.டி.ஓ. ஆபீஸ் கட்டுவதற்குமான வித்தியாசம் கூட அவருக்குத் தெரியவில்லை.

**அனைத்துப் பணிகளையும் மிகத் துல்லியமாக இந்த மூன்றாண்டு காலத்தில் முடித்துக் காட்டினார் முதலமைச்சர் அவர்கள். பவானி ஆற்றில் உபரி நீர் வருகைக்காக காத்திருந்தது தமிழ்நாடு அரசு. உபரி நீர் வந்தால் தான் அது திட்டத்தின் தொடக்கமாக அமையும். 'உபரி நீர் வந்ததும் திட்டம் தொடங்கப் படும்' என்று தொடர்ச்சியாக சொல்லி வந்தார் அமைச்சர் முத்துசாமி. அந்த அடிப்படையில் இப்போது உபரி நீர் வந்ததும் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார் முதலமைச்சர். இதில் என்ன குறையைக் கண்டார் பழனிசாமி?**

**ஆயிரம் நீர் நிலைகள் நிரம்பி, 25 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் அத்திக்கடவு - அவிநாசி திட்டமானது மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது ஆட்சியின் மகத்தான சாதனைகளில் ஒன்றாக உயர்ந்து நிற்கிறது. அதிகமான நீர்நிலைகளை நிரப்பி நீரேற்றும் வகையில் தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீரேற்றும் திட்டமாக இது அமைந்துள்ளது. மேற்கு மண்டல மக்களின் 60 ஆண்டு கனவை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறது தி.மு.க. அரசு.**

••



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.8.2024) தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள அமெரிக்க நாட்டு துணைத் தூதர் கிறிஸ்டோபர் ஹாட்ஜஸ் (Thiru. Christopher Hodges) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், அமெரிக்க தூதரகத்தின் ஆலோசகர் (வணிக விவகாரங்கள்) கேரி அருண், அரசியல் மற்றும் பொருளாதார வல்லுநர் கார்த்திக் செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.8.2024) தலைமைச் செயலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் சந்தித்து, தொகுதி மேம்பாட்டு பணிகள் குறித்து கோரிக்கை மனுவினை அளித்தார். உடன் பாரதிய ஜனதா கட்சியின் மாநில துணைத் தலைவர் பேராசிரியர் பி.கனகசபாபதி, மாநிலச் செயலாளர் திருமதி சுமதி வெங்கடேசன் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை சந்தித்துப் பேசினார்.

## கருவூலக் கணக்குத் துறையில்

# 547 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 21 -

நிதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கருவூலக் கணக்குத் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கணக்கர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 537 நபர்களுக்கும், கருவூலக் கணக்குத் துறையில் கருணை அடிப்படையில் 10 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இதுகுறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.8.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் கருவூலக் கணக்குத் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கணக்கர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 537 நபர்களுக்கும், கருவூலக் கணக்குத் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் 10 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலும், பணி நியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

கருவூலக் கணக்குத் துறை தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் ஓய்வூதியம் பட்டுவாடா செய்தல், வரவு செலவு விபரங்களை ஒப்பாய்வு செய்து கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு ஒப்படைப்பு செய்தல், அரசின் வைப்பு கணக்குகளை கையாளுதல் மற்றும் முத்திரைத்தாள் விநியோகம் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கருவூலக் கணக்குத் துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து, இதுநாள் வரை, கருவூலக் கணக்குத் துறையில் 16 கணக்கு அலுவலர், 118 இளநிலை உதவியாளர், 57 தட்டச்சர் மற்றும் ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் என மொத்தம் 192 பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கணக்கர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 537 நபர்களுக்கும், கருவூலக் கணக்குத் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் 10 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலும், பணி நியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள பணியாளர்களுக்கு சிறப்பாக பணிபுரியும் பொருட்டு முழுமையான பயிற்சிகள் வழங்கவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித்துறை செயலர் (செலவினம்) எஸ்.நாகராஜன், கருவூலக் கணக்கு ஆணையர் கிருஷ்ணனுன்னி, கருவூலக் கணக்குத் துறை கூடுதல் இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கூட்டரங்கில், நேற்று (20.08.2024) பொதுப்பணித்துறையின் சென்னை மண்டலம் சார்ந்த பணிகள் குறித்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சிறப்புப் பணி அலுவலர் இரா.விஸ்வநாத், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் மணிவண்ணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.